அசல்

5.3.35 L. உலகநாத பிள்ளை

அசல் – 1 நகல் – 1

Replied 16.3.35.

Krishna Rao Lane,
Tanjore 5.3.35.

உ

|| தமிழ்த்தாயின் அருமைந்த புதல்வ! செல்வாய்ப்பட்டழிந்து மண்ணிற் புகாது, ஏடுகளைச் சிரமம் பாராட்டாது அல்லும்பகலும் ஆராய்ந்து அச்சிட்டு உலகிற் கீந்துவக்கும் வள்ளியோய்! நின்போல விடாமுயற்சியுடன் தமிழ்க்கு ஆக்கம் தேடுநர் உலகில் எவர்?

முகத்தா னமர்ந்து நோக்கி அகத்தானும் இன்சொல்லுரைக்கும் அண்ணல்! திருவடிக்கண் வணக்கம் மிகப்பல. ||

பேரன்பு சான்ற பெரியீர்!

சென்னையம்பதி செய்த புண்ணியத்தால், அங்கு உங்கட்கு எண்பதாம் ஆண்டு நிறை விழாக் கொண்டாட்டம் நடைபெறுவதாகப் பத்திரிகை வாயிலாகத் தெரிந்து மிக்க மகிழ்ச்சி எய்துகின்றேன். அங்குவந்து தேவரீர் திருமேனிப் பொலிவைக் கண்டு களிக்கும் பேறு பெற்றிலேன்; உடல் நலமின்மையால்.

தாங்கள் எத்துணை காலம் இருப்பினும், உலகிற்கு அஃதொரு சுமையாக மாட்டாது; ஆகவே, இன்னும் மிகப்பல ஆண்டுகள், நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வத்துடன் உலகில் தமிழ்த் தொண்டாற்றி இனிது வாழ்ந்திருக்க இறைவன் திருவடியை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
தாங்கள்பால் அன்பும் பணிவுமுள்ள,
L. Ulaganatha Pillai,
Senior Professor of Tamil, Rajah's College, Tanjore
(Retired)

அசல்

5.3.35 உ. உலகநாத பிள்ளை.

அசல் -1 நகல் -1

87